IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO.125/2017

Deposition of Witness : PW-2

Name : இன்பலிங்கம்

Father's Name /W/o : த/பெ. மாணிக்கம்

Religion : இந்து

Caste : -

Calling : -

Address : தக்கோலம் கிராமம், அரக்கோணம் வட்டம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 19.03.2024

குறுக்கு விசாரணை:

1. தக்கோலத்தில் எங்கு உள்ளேன் என்றால் பழன்டியம்மன் கோவில் தெருவில் உள்ளேன். சாட்சி சொல்ல என்னை யார் அழைத்து வந்தது என்றால் பலராமன் என்னை அழைத்து வந்தார். பலராமன் எந்த தெருவில் உள்ளார் என்றால் கள்ளியத்தம்மன் கோவில் தெருவில் உள்ளார். பலராமன் உடன் தான் தக்காளியம்மாள் உள்ளார் என்றால் ஆம். தக்காளியம்மாள் கூலி வேலை செய்கிறார் என்றால் காய்கறி வியபாரம் செய்கிறார். சந்தையில் கடை வைத்துள்ளாரா என்றால் சந்தையில் பையன் உடன் கடை வைத்துள்ளார். தக்காளியம்மாளின் தாய் தந்தை பெயர் தெரியுமா என்றால் சுப்பராயரெட்டி மற்றும் தனம்மாள். சுப்பராயரெட்டி எங்கு இருந்தார் என்றால் சக்தி விநாயகர் கோயில் தெருவில் இருந்தார். சுப்பராயரெட்டிக்கு தனம்மாள் 3 வது மனைவி என்றால் 2 மனைவி தான் எனக்கு தெரியும். எத்தனை மனைவி என்று எனக்கு தெரியாது. தனம்மாள்

2 வது மனைவியா 3 வது மனைவியா என்றால் தனபாக்கியத்திற்கு குழந்தை இல்லை என்பதால் தனம்மாளை திருமணம் செய்தார். அதற்கு முன்பு திருமணம் செய்தாரா தெரியாது. அவர்களுக்கு குழந்தைகள் உள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது.

2. என்ன வழக்கு போட்டுள்ளார் என்றால் பாகப்பிரிவினை வழக்கு போட்டுள்ளார். என்ன சொத்து கேட்டுள்ளார்கள் என்றால் 3 ஏக்கர் பயிர் வைக்கும் நிலமும் வீட்டு மனையும் பாழடைந்து உள்ளது. சொத்துக்கள் சுப்பராயரெட்டிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் ஆம். தனபாக்கிம்மாள் இருக்கும்போதோ தனம்மாளை திருமணம் செய்துக்கொண்டார் என்றால் ஆம். தனபாக்கியம்மாள் தற்போது உள்ளாரா என்றால் உள்ளார். தனம்மாள் இறந்துவிட்டார். தனபாக்கியம்மாள் அவர் மகன் 2 ம் பிரதிவாதி பழனிவேல் உடன் இருக்கிறார் என்றால் ஆம். சுப்பராயரெட்டி சொத்தை பொறுத்து உயில் எழுதி வைத்துள்ளாரா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தனபாக்கியம்மாள் பழனிவேலுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் ஆம். ஆனால் சுப்பராயரெட்டி எழுதவில்லை. தக்காளியம்மாளுக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 35, 40 வருடம் இருக்கும். அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தது குடும்பத்தை பார்த்தது எல்லாம் தனபாக்கியம்மாள் என்றால் தனபாக்கியம்மாளும் பார்த்தார். சுப்பராயரெட்டியின் மகன் பழனிவேலும் பார்த்தார். சுப்பராயரெட்டி எப்போது இறந்தார் என்றால் 35, 40 வருடத்திக்குள் இருக்கும். நான் சிறுவயதாக இருந்ததால் அவர் சொத்து என்ன செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது. அவரையும் அவர் குடும்பத்தையும் மட்டும் தான் தெரியும். சுப்பராயரெட்டிக்கு முதல் திருமணம் ஆகி 4 குழந்தைகள் உள்ளார்கள் என்றால் அதை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அவர் சிறுவயதில்

திருமணம் செய்திருந்தால் எனக்கு எப்படி தெரியும்.

3. பழனிவேலும் எங்கு உள்ளார் என்றால் தக்கோலத்தில் நகரி குப்பம் போகும் வழியில் உள்ள கழனி இடம் உள்ளார். குடிசை போட்டு உள்ளாரா என்றால் சிறிய தகரம் போட்ட வீடாக வைத்துள்ளார். அந்த கழனி சம்பந்தமாக தான் பாகப்பிரிவினை வழக்கு போட்டுள்ளார் என்றால் ஆம். அந்த கழனியில் வீடு கட்டி எத்தனை வருடமாக உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எந்த விவரமும் தெரியாமல் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.